DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 7-2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். சரவணகுமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 04.12.2025

**(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் முன்னிலை. )**

**அரசு தரப்பு வழக்கறிஞர் மனுவின் பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

27.09.2021ந் தேதி நான் சாட்சியத்தில் பிரேதத்தில் காயம்பட்ட வெளிப்புற காயங்கள்

2)ஒரு வெட்டிய துளையிட்ட கிழிந்த காயம் இடது அடிவயிற்று பகுதியில் 14x4x9 cm அளவில் காணப்பட்டது. உள் இருக்கும் குடல் வெளியே வந்து காணப்பட்டது.

3) தலைப்பகுதியில் தலையின் parietal occipital பகுதிகளில் இரண்டு வெட்டிய கிழிந்த காயங்கள் காணப்பட்டது. அதன் அளவுகள் முறையே 8x5x3 and 10x7x2 cm தலையின் எலும்புகள் உடைந்த நிலையில் காணப்பட்டது.

4) இடது தலை எலும்பின் மேல்பகுதியில் Left parietal பகுதியில் ஒரு வெட்டிய கிழிந்த காயம் 12x8x6 cm அளவில் காணப்பட்டது. தலை எலும்பு உடைந்த நிலையில் காணப்பட்டது.

2 முதல் 4 காயங்கள் என்னிடம் காட்டப்படும் ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆயுதம் கோடாரி ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் ஆய்வாளர் இந்த ஆயுதத்தை காண்பித்து இதனால் ஏற்படுமா என்று கேள்வி எதுவும கேட்கவில்லை நான் பதில் சொல்லவும் இல்லை. முதல் முறையாக இன்று தான் நீதிமன்றத்தில் காண்பிக்கும் போது நான் பதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். படிவம் 86 பிரேதத்தின் மீது காணப்படும் காயங்கள், ஆபரணங்கள், காயங்கள் குறித்து குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். போஸ்ட்மார்டம் ரப் நோட்ஸ் என்று உள்ளது என்றால் சரிதான் இந்த நோட்ஸின் அடிப்படையில் தான் சடல கூராய்வு செய்து பிண கூராய்வு செய்த அறிக்கை தாக்கல் செய்தோம் ஆனால் ரப் நோட்ஸ் கொடுக்கவில்லை. அந்த நோட்ஸில் அவையத்தை பற்றிய அளவு, பரிமாணம், கணம், நிறம் ஆகியவற்றை பற்றி குறிப்பிடபட வேண்டும் நான் குறிப்பிட்டுள்ளேன். அளவும், தன்மையும் குறிப்பிடபட வேண்டும் என்றால் சரிதான். அவைகளை எல்லாம் குறிப்பிடவில்லை என்றும் அதானல் தான் அதை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றும் சடல கூராய்வு சட்டவிதிகளின் படி செய்யபடாததால் தான் கொடுக்கவில்லை என்றும் என்னுடைய சடல கூராய்வு முழுமையாக தவறாக செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நோட்ஸ்ஸை நான் பார்மாசிட்ஸ்டம் கொடுத்தேன். அது பி.எம் சர்டிபிகேட்டுக்கு முன்பு உள்ளது. போஸ்ட்மார்டத்தின்போது வீடியோ பதிவு செய்யப்படவில்லை. போஸ்ட்மார்டம் செய்யும்போது டெக்னிசியன்

மற்றும் துப்புறவு பணியாளர்கள் பிணவறையில் இருப்பார்கள் என்றால் சரிதான். இந்த காயங்களுடைய அளவு, தன்மைகள் என்னிடம் இந்த நீதிமன்றத்தில் காட்டப்பட்ட அ.சா.பொ.1 ஆல் ஏற்படுத்தபடவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. இந்த ஆயுதத்தாலும் heavy weapons லும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்த விசயங்களை நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. Marpling சம்பந்தமாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். history of case ஆய்வாளர் எழுத்து மூலமாக என்னிடம் கொடுக்கவில்லை வாய் மூலமாக என்னிடம் சொன்னார்கள். நான் Forensic சட்டம் சார்ந்த மருத்துவத்தில் நான் பட்டம் பெறவில்லை நான் eyes பெசலிஸ்ட் அதற்கு முன்பு நான் உதவி மருத்துவர் MBBS டாக்டர். நான் சடல கூராய்வு செய்து சான்று வழங்கியது சரியானது அல்ல என்றால் சரியல்ல.